27.11.2025

OS No: 73/2022

பி.வா.சா. 2 திருமதி. விஜயா க/பெ. கண்ணன்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எந்த வருடம் திருமணம் நடைப்பெற்றது என்றால் 17.03.2002ம் வருடம் திருமணம் நடைப்பெற்றது. திருமணத்திற்கு முன்பு எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் திருப்பத்தூர் தாலுகா இளையாத்தங்குடி என்ற ஊர் ஆகும். எனது கணவர் வீட்டில் உள்ள வரவு செலவு குறித்து எனக்கு திருமணத்திற்கு முன்பு தெரியுமா என்றால் திருமணத்திற்கு முன்பு தெரியாது. திருமணத்திற்கு பிறகு எனது கணவர் சொல்லியுள்ளார். எனது கணவருடன் பிறந்த ஆண், பெண் எத்தனை பேர் என்றால் கணவருடன் சேர்த்து 3 ஆண் மற்றும் 2 பெண் உடன்பிறந்தவர்கள். எ னது கணவருடன் பிறந்த பெண்களுக்கு எந்த வருடம் திருமணம் நடைப்பெற்றது என்றால் தெரியாது. எனது திருமணத்தின் போது எனது கணவர் எங்கு வேலை பார்த்தார் என்றால் சிங்கப்பூரில் கம்பிகட்டும் வேலை செய்து வந்தார். எனது திருமணத்தின் போது எனது கணவர் மாத சம்பளம் எவ்வளவு வாங்கினார் என்றால் தெரியாது. ( சாட்சி தற்போது ரூ.80000/- வாங்கியதாக சொல்கிறார்) .எ னது கணவர் இது வரை வருமான வரி செலுத்தியுள்ளாரா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு முன்பும், பின்பும் எனது மாமனார் என்ன வேலை பார்த்தார் என்றால் வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது திருமணத்திற்கு முன்பு எனது மாமனார் வேலை பார்க்கவில்லை என்ற விபரம் யார் சொன்னது என்றால் திருமணம் ஆனவுடன் எனது கணவர் சொன்னார் நேரடியாக தெரியாது. எனது திருமணத்திற்கு முன்பு எனது மாமனார் எத்தனை ஆண்டுகள் வேலையில்லாமல் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது எனது கணவரும் சொல்லவில்லை. எனது மாமனார் விவசாயம் வேலை பார்த்தார் என்றால் நாங்கள் அனைவரும் எங்கள் மாமனாருடன் சேர்ந்து தான் விவசாயம் வேலை செய்தோம். பிராதை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளார் என்றால் தாவா சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியம் என கோரி வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண் தெரியுமா என்றால் பட்டா எண். 1181, சர்வே எண். சரியாக ஞாபகமில்லை ஆவணம் எண்.

398 ஆகும். ஆவண எண். 398 எந்த ஊரில் உள்ள அலுவலக ஆவணமாகும் என்றால் S.S.கோட்டை அலுவலக ஆவணமாகும். எதிர்வழக்குரைக்கான விபரம் வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். எனது மாமியார் தற்போது எங்கு உள்ளார் என்றால் உடல்நலம் சரியில்லாததால் சென்னையில் அவருடைய மகள் வீட்டில் உள்ளார். எனது கணவருடை பூர்வீக சொத்து எத்தனை ஊரில் உள்ளது என்றால் காட்டாம்பூரில் உள்ளது. பூர்வீக சொத்தை எனது கணவர் குடும்பத்தார் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை. மேற்படி சொத்தை தவிர வேறு பூர்வீக சொத்து எதுவும் உள்ளததால் என்றால் எனது கணவரின் தாயார் வழியில் ஐயாப்பட்டி கிராமத்தில் விவசாயம் நிலம் உள்ளது. அந்த பூர்வீக சொத்தையும் எனது கணவர் குடும்பத்தார் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை. மேற்படி சொத்தை கூட்டு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனது மாமனார் தாவா சொத்தை எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 2006ம் வருடம் வாங்கினார். தாவா சொத்தை கிரையம் வாங்கிய போது அதில் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் யார் என்றால் நாராயணன், சின்னகருப்பன் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். மேற்படி சொத்தை கிரையம் பெற்ற போது எனது கணவர் எங்கு இருந்தார் என்றால் வெளிநாட்டில் இருந்தார். எனது கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்பதை காட்டக்கூடிய அவரது பாஸ்போட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாரா என்றால் தயார். மேற்படி எனது மாமனார் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்காக பத்திர அலுவலகத்திற்கு சென்ற போது உடன் சென்றவர்கள் யார் என்றால் தெரியாது. வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2021 டிசம்பர் மாத்தில் தெரியும் அப்போது என்னுடைய கணவர் வெளிநாட்டில் இருந்தார். எனது திருமணத்திற்கு பிறகு வெளிநாட்டில் இருந்து எத்தனை முறை எனது கணவர் இந்தியா வந்து சென்றுள்ளார் என்றால் சுமார் 7 முறை வந்து சென்றுள்ளார். தாவா வழக்கிற்கு பின்னிட்டு எத்தனை முறை எனது கணவர் வந்து சென்றுள்ளார்என்றால் 1 முறை வந்தார் 2 மாத விடுமுறையில் வந்தார். தாவா சொத்தை வாதிகிரையம் பெற்றது செல்லாது என பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்கில் நீதிமன்ற கட்டணம் செலுத்தி எதிர்கோருரிமை பேரில் வாதி கிரையம் பெற்றது செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். மேற்படி எதிர்கோரிக்கை பரிகாரம்

எதுவும் கேட்டிடமால் கேட்டதாக பொய் சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி கிரையம் வாங்கியது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் தாவா சொத்தை வாதி கிரையம் எதுவும் பெறவில்லை. தாவா சொத்தில் ஓட்டுக்கொட்டகை போட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஓட்டுக்கொட்டகை தாவா சொத்தில் உள்ளது என்பதை எடுத்துக்காட்டிட ஆணையர் நியமனம் கோரி நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை எனது மாமனார் கிரையம் வாங்கி பிறது 12 வருட காலகக்ட்டத்திற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2018ம் வருடத்தில் உள்ள ஆவணத்தை கொடுத்துள்ளேன். தாவா சொத்து வாதிக்கு கிரைய பாத்திய சொத்து என்றும் வாதி வெளியூரில் இருந்ததை பயன்படுத்தி மோசடியாக ஆவணங்களை நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவர் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பியதை காட்டிட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரையம் பெற எங்கள் மாமனாருக்கு எனது கணவர் எந்த ஒரு பணமும் கொடுக்கவில்லை என்றும் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியமில்லை என்றும் சொன்னால் சரியல்ல, இந்தியன் வங்கிக்கு எனது கணவர் எனது மாமனாருக்கு பணம் அனுப்பியுள்ளார். தாவா சொத்து எனது மாமனார் கிரையம் பெற்ற சொத்து என்பதால் மேற்படி சொத்தை பாகம் பிரித்து கொண்டதாக வழக்கிற்காக சொல்கிறோம் என்றும் மேற்படி சங்கதிகள் உண்மையல்ல என்றும் ஏனெனில் பூர்வீக சொத்து எங்களுக்குள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு நடக்கும் விபரம் எனது கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கணவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்திட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால் வந்து செல்ல ஏதுவாக இருக்காது என்பதால் சேர்க்கவில்லை. எ னது மாமனார் காட்டாம்பூரில் உள்ள பூர்வீக சொத்தை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்தது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை. எனது மாமனார் 2021 ம் வருடம் டிசம்பர் என் மீதும் எனது மகன் மீதும் S.S.கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்தார் அது பொய் வழக்காகும். வாதியும் மேற்படி புகாருக்கு பிறகு 3 நாட்களில் எங்கள் மீது புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். தாவா சொத்தில் செல்போன் கோபுரம் ஒன்று உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி

செல்போன் கோபுரத்திற்கான வாடகை ஒப்பந்தம் எனது மாமனார் பெயருக்கு பிறகு வாதியின் பெயரில் உள்ளது என்றா்ல் சரிதான். தாவா சொத்து எங்களுக் தனிப்பட்ட பாத்தியம் என பரிகாரம் கோரி வழக்கு எதுவும் தனியாக தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் அத்துமீறி தாவா சொத்தை அபகரிக்கவேண்டி பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இருந்து காலிசெய்திட எங்களுக்கு வாதி காலஅவகாசம் தற்போது கூட கொடுக்க தயாராக உள்ளார் அது குறித்து நான் என்ன சொல்கிறேன் என்றால் தாவா சொத்தில் 4 செண்ட் எங்களுக்கு வேண்டும். தாவாவழக்கானது வாதியின் செலவுத்தொகையுடம் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.27 17:30:32 +0530